# கோவை கங்கா மருத்துவமனையில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை அறிமுகம்



கோவை கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை இந்திய விமானப்படை தலைமை தளபதி பிரேந்தர்சிங் தானோ கொடி அசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மருத்துவமனை தலைவர் சண்முகநாதன் உள்ளார்.

## ஏர் சீப்மார்ஷல் பிரேந்தர்சிங் துவக்கிவைத்தார்

**கோவை, ஜூன் 26:** கோவையில் கங்கா மருத்துவமனை சார்பில் கங்கா ஏர் ஆம்புலன்ஸ் சேவை துவக்கவிழா, கோவை வட்டமலைபாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

விழாவில் கங்கா மருத்துவமனை இயக்குனர் ராஜசபாபதி வரவேற்றார். ஓய்வுபெற்றபொது மருத்துவ சேவை இயக்குனர் (ஏர்) அனில்பெல், மாவட்ட கலெக்டர் ஹரிகரன், மாநகர போலீஸ் கமிஷனர் அமல்ராஜ், கோவை மேற்கு மண்டல போலீஸ் ஐ.ஜி பாரி ஆகியோர் வாழ்த்தி பேசினர். நொய்டா வருமானவரித்துறை ஆணையர் ஸ்ரீவத்சவா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக இந்திய விமானப்படையின் ஏர் சீப்மார்ஷல் பிரேந்தர்சிங் தானோ கலந்துகொண்டார்.

பின்னர், அங்கு நடந்த, அவசர கால விமான மருத்துவ சேவை செயல்பாடு குறித்த ஒத்திகையையும் பார்வையிட்டபின் அவர் விழாவில் பேசியதாவது: கங்கா மருத்துவமனை ஏர் ஆம்புலன்ஸ் சேவையை துவங்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. நாடு முழுவதும் இந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவை பயன்பட வேண்டும். இந்த ஏர் ஆம்புலன்ஸ் மூலம் அவசர சிகிச்சைக்காக ஒரு நகரத்தில் இருந்து மற்றொரு நகரத்திற்கு நோயாளிகளை விரைவாக கொண்டுசெல்ல முடியும்.

கடந்த 1999ம் ஆண்டு கார்கில் போர் நடந்தது. அப்போது ராணுவ வீரர்கள் பலர் காயமடைந்தனர். அப்போது ஜம்முவில் ஸ்ரீநகர் மற்றும் அவந்பூர் உள்ளிட்ட மலைப்பிரதேசங்களுக்கு ஐஎஎப் எம்ஐ-17 மற்றும் எம்ஐ- 8 ரக ஹெலிகாப்டர்களை அனுப்பி காயமடைந்த வீரர்களை மீட்டு, டெல்லியில் உள்ள ராணுவ மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டனர். இதையடுத்து 2007ம் ஆண்டு இந்திய விமானப்படையில் சிசிஏடிடி எனும் கிரிட்டிகல் கேர் விமானச்சேவை குழு அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் விமானப்படையில் அவசர கால சிகிச்சைக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய விமானப்படையில் 17 விமானங்கள் ஏர் ஆம்புலன்சாக மாற்ற முடியும். எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டபோது, ஏர் ஆம்புலன்ஸின் முக்கியத்துவத்தை அறிந்தேன். ஏர் ஆம்புலன்ஸ் போன்ற சேவையால் இந்தியாவில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் மருத்துவ சேவை அளிக்க முடியும். இவ்வாறு ஏர் சீப்மார்ஷல்பிரேந்தர்சிங்தானோ பேசினார்.

விபத்தில் காயமடைந்தவரை விரைவாக கொண்டு செல்லவும், உடல், உறுப்புகளை பிற நகரங்களுக்கு எடுத்துச்செல்லவும் கங்கா மருத்துவமனை சார்பில் ஏர் ஆம்புலன்ஸ்சேவை தொடங்கப்பட்டது. இந்தஏர் ஆம்புலன்ஸ் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட அகுஸ்தா 199 ரகஹெலிகாப்டர். 2 பைலட், 1 மருத்துவர், நோயாளியுடன் உறவினர் ஒருவர் பயணிக்கலாம். எரிபொருள் நிரப்பிய நிலையில் ஏர் ஆம்புலன்ஸில் 500 கி.மீதூரம்வரை சென்றுவர முடியும். இதய துடிப்பை சீராக்கும் கருவி உள்ளிட்ட மருத்துவ வசதிகள் உள்ளன. கோவை வட்டமலைபாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரியில் ஹெலிபேடு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் கங்கா மருத்துவமனை தலைவர் சண்முகநாதன், நிர்வாக இயக்குனர் கனகவல்லி சண்முகநாதன், ராஜசேகரன் உள்பட விமானப்படை அதிகாரிகள், மருத்துவர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.